# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,909—1970 ජූනි 5 වැනි සිකුරාදා—1970.6.5

14,909 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூன் மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விசேடக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 327 | இலங்கை மத்திய வங்கியின அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 328 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 328 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 329 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 330 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜிஸ்திரேட்டுகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 329 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. | — |


### மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 186

எண். டி 21/ஆர்ஈசிரி/443

**தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் தரைப்படையின் நிரந்தரப் படையில் இருந்து 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகிறார் :—

மேஜர் கொட்வின் வால்ற்றர் ஷொக்மன், சி. ஏ. ஒ. சி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 25.

6–65

1970 இன் இல. 187

எண். டி/விஎவ்/34 (பி)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை அமர்வு துறத்தல்**

தரைப்படையின் இலங்கை தொண்டர் படையின் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் அரசாணை அமர்வு துறத்தலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் :—

லெவ்ரினன்ற் அப்துல் ஹனன் மொகமெட் தௌபீக், சி. ஏ. பி. சி.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 25.

6–64

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 188

எண். டி/விஎவ்/17/எ (V)

## தரைப்படை—சி. வி. எவ்.–அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மாற்றுச் சேவை நீடிப்பு

தரைப்படையின் தொண்டர் படையின் கீழ்க்குறித்த அலுவலர் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் இரண்டு மாதகாலத்திற்கு நிரந்தரப் படையில் மாற்றுச் சேவையை நீடித்தல் செய்தலை அங்கிகரித்தலில் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்.

கப்ரின் தொன் கருணசேன குலசேகர, சி. சி. சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜீ. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 19.

6–17

---

1970 இன் இல. 189

என்.டி/வி.எவ்/9/எ

## தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் சேவைக்கு நியமித்தலும்

கீழ்க்குறிப்பிடப்பட்ட உவாறன்ற் ஒபிசர் 1970 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் தொண்டர் படையில் லெவ்ரினன்ற் (குவாட்டர்–மாஸ்டர்) ஆக அரசாணை அமர்வு செய்யப்படுதலையும் இலங்கைத் தரைப்படைத் சேவைச் சிறப்பணிக்கு (தொண்டர் படைக்கு) நியமிக்கப்படுதலையும் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் களிப்புடன் அங்கீகரித்துள்ளார்கள் :—

3087 உவாறன்ற் ஒபிசர் 11 சைமன் கன்னங்கர

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜீ. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970, மே 25

6-67

---

1970 இன் இல. 190

எண். டி 22/ஆர்ஈசிரி/176

## இலங்கை அரச கடற்படை—நிரந்தர கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் இலங்கை அரச கடற்படையின் நிரந்தர கடற்படையில் இருந்து 1970, யூன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகின்றனர் :—

லெவ்ரினன்ற்–கொமான்டர் (என்.டி.) எம். எம். ஏ. உவாகீட், இலங். அ. க.

லெவ்ரினன்ற்–கொமான்டர் (என்.டி.) ஜெ. ஏ. இரத்நாயக, இலங். அ. க.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜீ. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மே 22.

6–66

---

# அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 191

## 1970 ஆம் 7 ஆம் இலக்கம்

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் நியமனங்களைச் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளது :—

இலக்கம் : ஏபி 19/70.

முதலாம் தரப் பொலிசு அத்தியட்சரான திரு. ஆர். ராஜசிங்கம் 1970.4.26ம் திகதியிலிருந்து பதில் உதவிப் பொலிசு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

1970 மே மாதம் 25,
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
கொழும்பு–1.

6–57

---

# நீதிச்சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 192

இல. : ஜே. எம்./நீ./93/69.

நிந்தகம காணி அதிகாரச் சட்டத்தின் கீழ், 1970, ஜுன் 1 விருந்து மூன்று வருட காலத்திற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினுல் செய்யப்பட்ட நியமனங்கள் பின்வருமாறு :

| பெயர் | நியமனம் |
|---|---|
| 1. திரு. ஆர். டபிள்யு. தென்னக்கோன் .. .. | தலைவர், நிந்தகம காணிச்சபை |
| 2. திரு. ஜீ. ஈ. அமரசிங்க .. | உறுப்பினர், நிந்தகம காணிச்சபை |
| 3. திரு. டி. ஆர். ஜயக்கொடி .. | ஷை |
| 4. திரு. டபிள்யு. விமலச்சந்திர .. | ஷை |
| 5. திரு. எஸ். பி. விஜயதிலக்க .. | ஷை |
| 6. திரு. வி. ஆர். விக்ரமதிலக்க | |
| 7. திரு. ஜீ. சுகதபால .. | ஷை |
| 8. திரு. டபிள்யு. எம். கருணரட்ன | ஷை |
| 9. திரு. எம். பி. கப்பகொட .. | ஷை |
| 10. திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க.. | ஷை |
| 11. திரு. டபிள்யு. பி. இம்புல்டெனிய .. .. | ஷை |
| 12. திரு. எச். பீட் பெரேரா .. | ஷை |
| 13. திரு. பி. எஸ். மஹலகம .. | ஷை |
| 14. திரு. என். எம். யூசுவ் .. | ஷை |
| 15. திரு. எஸ். எச். மகாதிவுள்வெவ .. .. | ஷை |

சிறிமெவன் அமரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970, மே 26.

6–111

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 193

பி 4/எஸ்வி 2/358, பி 4/எஸ்வி 38/113,
பி 4/எஸ்வி 16/103, பி 4/எஸ்வி 25/22.

### நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

**82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர் அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான்—

1. ஜோன் அல்பிரட் ஆதிகெட்டி அவர்களை கம்பகா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
2. முகாந்திரம் ரால்லாகே ரத்நாயக அவர்களைக் கேகாலை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
3. தெலிகட மாசாச்சி சிறிதாச நாநாயக்கார அவர்களை மாத்தறை நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
4. முகமது இஸ்மெயில் ஹஜ்ஜியார் அகமது முகைதீன் ஹஜ்ஜியார் அவர்களை மட்டக்களப்பு நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்

இத்தால் நியமிக்கின்றேன்.

ඒ. එෆ්. විජේමාන්න,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970, மே 25 ஆந் நாள்.

6—53

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம்

(283 ஆம் அத்தியாயமான) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தினுல் ஆக்கப்பட்டு நிதி அமைச்சருக்கு அப்பிரிவினுல் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பலத்தைக் கொண்டு அவரால் உறுதிப் படுத்தப்பட்ட விதி.

எம். இராசேந்திரா,
நிரந்தரச் செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1970, மே மாதம் 10 ஆந் தேதி.

**விதி**

1892, யூன் மாதம் 17 ஆந் திகதி வெளியான 5,147 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட விதிகள் அத்தியாயம் 1—பொது விதிகளின் 4 ஆம் விதியை உடனடுத்துப் பின் வரும் புதிய விதியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றன.

### விதி 25. முகாமைக் குழு

அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4 (1) (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்காய நியமிப்பு முறைப்படி முன் மொழிபவரா லும் வழிமொழிபவராலும் கையொப்பமிடப்பட்டும், சம்பந்தப்பட்ட அபேட்சகர் தன் சம்மதத்தைத் தெரிவித்து மேலெழுதியும், தத்தம் உறுப்புரிமை இலக்கத்தை இட்டும் ஆண்டுக் கூட்டம் பற்றிய முதல் அறிவித்தலிற் குறிப்பிட்ட திகதியன்று அல்லது அதற்கு முன் கூட்டுச் செயலாளரும் பொருளாளருமாகியவரை அடையக் கூடியவாறு அனுப்பப்படுதல் வேண்டும். முகாமைக்குழு நியமிப்புக்கள் யாவற்றையும் நுனித்தாய்ந்து ஒழுங்காக நியமிப்புச் செய்யப்பட்ட அபேட்சகர்களின் முழு நிரலை, முன் மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரின் பெயர்களையும் சேர்த்து, நிகழ்ச்சி நிரலுடன் வெளியிடுதல் வேண்டும்.

6—13

## மீள் நோக்கச் சபை—உள்நாட்டு இறைவரி வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழும் நியமனங்கள்

கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத். 242) 74 (1) ஆம் பிரிவின் கீழும் 1963 இன் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 98 (1) ஆம் பிரிவின் கீழும் திரு. டி. கொஸ்வத்த என்பவரை 1.6.1970 ஆந் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்துக்கு மேற் கூறிய மீள் நோக்குச் சபை உறுப்பினராக நியமிக்கின்றார்.

க. சிற்றம்பலம்,
நிதி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்காக.

நிதி அமைச்சு,
கொழும்பு,
23.5.1970.

6—7

---

ச. வ.–பி. 15/36

### சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

**35 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சர் அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான், திருவாளர்கள் கே. கணபதிப்பிள்ளை, எ. ஆர். தோமஸ், முதலியார் எ. சின்னலெப்பே, எல். எச். பியசேன ஆகியோரை 1970 மே 6 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்கு, மட்டக்களப்பு சிறைச்சாலைக்கான உள்ளூர் இடைவருங் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கின்றேன்.

ඒ. එෆ්. විජේමාන්න
நீதி அமைச்சர்.

கொழும்பு, 1970, மே 23 ஆந் நாள்.

6—3

---

### 1954ம் ஆண்டின் 37ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டம்

**49ம் பிரிவின் கீழான சான்றிதழ்**

1954ம் ஆண்டின் 37ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 49ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சர் மஹாபாலகே தோன் ஹென்றி ஜயவர்த்தன ஆகிய நான் மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினுற் சுவீகரிக்கப்பட வேண்டும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

எம். டீ. எச். ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு
அமைச்சர்.

கொழும்பு.
1970, மே 19.

**அட்டவணை**

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், பெ. இ. உ. பிரிவிலும், திம்பிரிக்கசாய கிராம சேவகர் பிரிவினுள்ளும் அமைந்துள்ள கிட்டத்தட்ட ஏ. 2, ரூ. 3, பே. 0 விஸ்திரணமுள்ள, கொழும்பு, தொறிங்டன் மாவத்தையில் 255ம், 255/1–5, 21ம், 25ம் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட ஒரு காணித்துண்டு, அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு :—189 ம் வரிமதிப்பு இல, தொறிங்டன் மாவத்தை.
தெற்கு :—தொறிங்டன் மாவத்தையும், அலவும்
மேற்கு :—அலவும், 377ம் வரிமதிப்பு இல. (பகுதி) தொறிங்டன் மாவத்தையும்.
கிழக்கு :—213 ம் வரிமதிப்பு இல., தொறிங்டன் மாவத்தை.

6—25

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியில் மாடுகளுக்கு குறிசுடல்

1958 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் 35 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 20.8.62 லிம், 29.11.62 லிம் முறையே வெளியாகிய 13,268, 13,406 இலக்கங்களுடைய இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளில் 12 (iii) பிரிவின் கீழ் கோறளைப்பற்றுப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியில் கீழ் குறிப்படப்பட்ட அட்டவணையில் உள்ள இடங்களிலும் திகதிகளிலும் மாடுகள் குறிசுடப்படும் என்பதைப் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

கச்சேரி, மட்டக்களப்பு,
10.5.1970

தே. நேசையா,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

### மேற் குறிப்பிட்ட அட்டவணை

| குறிசுடும் உத்தியோகத்தர் | குறிசுடும் இடம் | திகதிகள் |
|---|---|---|
| 1. கி. சே. முறக்கொட்டன் சேனை, இல. 199 .. | .. சிறுதெங்கல் கனகரெத்தினம் வயல் நிலை | .. 1, 2, 3, ஜுன் 1970 |
| | முறக்கொட்டான் சேனை கி. சே. காரியாலயம் | .. 6, 7, 8, ஜுன் 1970 |
| 2. கி. சே. சந்திவெளி இல. 200 .. | .. திகிலிவெட்டைதுறையடி .. | .. 5–15, ஜுன் 1970 |
| | சந்திவெளிபாலயடிவளவு .. | .. 16–20, ஜுன் 1970 |
| | சத்திவெளிபாலயடிதோணு .. | .. 21–24, ஜுன் 1970 |
| 3. கி. சே. மிராவோடை (த) இல. 202 .. | .. முருங்கைத்தீவுத்திடல் .. | .. 5, 6, 7, 8 ஜுன் 1970 |
| | சுங்காங்கேணி .. .. | .. 12, 13, ஜுன் 1970 |
| | கிண்ணையடி .. .. | .. 9, 10, 11, ஜுன் 1970 |
| 4. கிரான் கி. சே. இல. 203 .. | .. புளிப்பாஞ்கல் .. | .. 5, 6, ஜுன் 1970 |
| | அத்தியடிச் சேனை .. .. | .. 7, 8, ஜுன் 1970 |
| | கிரான் .. .. | .. 9, ஜுன் 1970 |
| | கும்புறுமூலை, பொண்டுகள் சேனை .. | .. 10, 11, 12, 13, ஜுன் 70 |
| 5. கி. சே. கல்குடா இல. 204 .. | .. பாசிக்குடாதோட்டம் .. | .. 1, 2, 3, ஜுன் 1970 |
| | கல்குடா .. .. | .. 4, 5, ஜுன் 1970 |
| | சங்கிலிப்பள்ளம் .. .. | .. 6, 7, 8, ஜுன் 1970 |
| 6. கி. சே. வாழைச்சேனை இல. 205 (தமிழ்) | .. வாழைச்சேனைப் பேர்த்தாளைப் பள்ளத்து வளவு | .. 3, 4, 5, ஜுன் 1970 |
| 7. கி. சே. வாழைச்சேனை இல. 206 (மு) | .. வாழைச்சேனை பிரியந்துறைச் சேனை | .. 1, 2, ஜுன் 1970 |
| | மாவடிச்சேனை, எஸ். எம். கே. வளவு | .. 3, 4, ஜுன் 1970 |
| 8. மிராவோடை (மு) கி. சே. 207 .. | .. ஒட்டுவெளி .. .. | .. 5, 6, ஜுன் 1970 |
| | தவாணை .. .. | .. 7, 8, ஜுன் 1970 |
| | மிராவோடை (மு) .. .. | .. 9, 10, 11, ஜுன் 1970 |
| 9. கி. சே. ஓட்டைமாவடி இல. 208 .. | .. ஓட்டமாவடி, ப. நோ. கூ. ச. மைதானம் | .. 7, 8, 9, ஜுன் 1970 |
| 10. பேரில்லாவெளி கி. சே. இல. 209 .. | .. கோராவெளி .. .. | .. 1, 2, ஜுன் 1970 |
| | வட்டாவன் .. .. | .. 3, 4, ஜுன் 1970 |
| | வெள்ளாமைச்சேனை .. | .. 5, 6, ஜுன் 1970 |
| | தடானை .. .. | .. 7, 8, 9, ஜுன் 1970 |
| | முந்தானைச்சியமடு .. .. | .. 10, 11, 12, ஜுன் 1970 |
| | கும்பிமலை .. .. | .. 13, 14, ஜுன் 1970 |
| | முறுத்தானை .. .. | .. 15, 16, ஜுன் 1970 |
| | தராவை .. .. | .. 17, 18, ஜுன் 1970 |
| | அக்கரானை .. .. | .. 19, 20, ஜுன் 1970 |
| | பொத்தானை .. .. | .. 21, 22, ஜுன் 1970 |
| | மினுமினுத்தவெளி .. | .. 23, 24, ஜுன் 1970 |
| 11. வாகனேரி, கி. சே. இல. 210 .. | .. கல்வலை .. .. | .. 1–10 ஜுன் 1970 |
| | கூழாவார்ச்சேனை .. .. | .. 11–15 ஜுன் 1970 |
| | வகுலாவலை .. .. | .. 16–20 ஜுன் 1970 |
| | வெட்டுக்காட்டுவெளி .. | .. 21–25 ஜுன் 1970 |
| | மைலன்கரச்சை .. .. | .. 26–30 ஜுன் 1970 |
| | சூடுபத்தினசேனை .. .. | .. 1–5 ஜுலை 1970 |
| | பட்டியடிவெளி .. | .. 6–10 ஜுலை 1970 |
| | புணானை .. .. | .. 11–15 ஜுலை 1970 |
| | வாகனேரி .. .. | .. 16–20 ஜுலை 1970 |
| 12. கள்ளிச்சை கி. சே. இல. 210எ .. | .. ஊத்துச்சேனை .. .. | .. 1, 2, ஜுன் 1970 |
| | வட்டமுனை .. .. | .. 3, 4, 5, ஜுன் 1970 |
| | கள்ளிச்சை .. .. | .. 6, 7, 8, 9, 10 ஜுன் 1970 |
| 13. கி. சே. மாங்கேணி இல. 211 .. | .. மாங்கேணி .. .. | .. 6, 7, ஜுன் 1970 |
| | காரமுனை .. .. | .. 8, 9, ஜுன் 1970 |
| | ஆனண்டி .. .. | .. 10, 11, ஜுன் 1970 |
| | கிரிமிச்சை .. .. | .. 12, 13, ஜுன் 1970 |
| | மாவடிஓடை .. .. | .. 14, 15, ஜுன் 1970 |
| | பனிச்சங்கேணி .. .. | .. 16, 17, 18, ஜுன் 1970 |

| குறிசுடும் உத்தியோகத்தர் | குறிசுடும் இடம் | திகதிகள் |
|---|---|---|
| 14. கி. சே. காயான்கேணி இல. 211எ .. | .. நாசிவன்தீவு .. .. | .. 6, 7, 8, ஜுன் 1970 |
| | வட்டவான் .. | .. 10, ஜுன் 1970 |
| | காயன்கேணி .. .. | .. 12, ஜுன் 1970 |
| | ஆலங்குளம் .. .. | .. 13, ஜுன் 1970 |
| 15. கி. சே. வாகரை இல. 212 .. | .. வெள்ளயடிமடு .. .. | .. 19, 20, 21, ஜுன் 1970 |
| | வாகரை ப. நோ. கூ. ச. .. | .. 21, 23, 24 ஜுன் 1970 |
| | மக்கறச்சை .. .. | .. 25, 26, 27 ஜுன் 1970 |
| | தண்ணிப்பளை .. .. | .. 28, 29, 30 ஜுன் 1970 |
| 16. கி. சே. கதிரவெளி இல. 213 .. | .. வம்மிவட்டவான் பாடசாலை மைதானம் | .. 3, 4, 5, ஜுன் 1970 |
| | பால்சேனைச் சந்தி .. .. | .. 6, 7, 8, ஜுன் 1970 |
| | புதுர்வளவு .. .. | .. 9, 10, 11, ஜுன் 1970 |
| | செம்பிமடு .. .. | .. 12, 13, ஜுன் 1970 |
| | கற்பிட்டி .. .. | .. 14, 15, ஜுன் 1970 |

கே. சண்முகலிங்கம்,
பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர், கோறளைப் பற்று.

பெ. இ. உ. காரியாலயம்,
வாழைச்சேனை, 2.5.70.

6–59

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கு முரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம்,** கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.**

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறல் " கையொப்பமிடப் பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு : —

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | .. | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் ,வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|
| (அ) | (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| | (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) | (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| | (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. | பி. ப. 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | . | பி. ப. 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. | பி. ப. 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. | பி. ப. 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. | பி. ப. 3 30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. | ந. ப. 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. | ந. ப. 12.00 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.